பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 28 | ஞாயிற்றுக்கிழமை | 12.01.2025 | அதிர்வு 163

**தூக்கில் தொங்கிய நிலையில்**

## இந்தியப் பிரஜை சடலமாக மீட்பு!

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் பணிபுரிந்த 36 வயதுடைய இந்தியப் பிரஜை ஒருவர் நேற்று சீதுவ, லியனகே முல்லவில் உள்ள வீட்டுத் தொகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் 03





# சிறீதரன் மீதான கெடுபிடி: சி.வி.கே. கடும் கண்டனம்!

## அநுர அரசுக்கும் பகிரங்க எச்சரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நீண்ட நேரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன். எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரை அவமானப்படுத்தும் வகையில் அநுர அரசு செயற்படுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். 05

# உள்ளூராட்சித் தேர்தலுக்காக தெற்கில் குவியும் கூட்டணிகள்



உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காகக் கூட்டணி அமைத்துக் களமிறங்குவதற்கான பேச்சு தெற்கு அரசியல் களத்தில் முழு வீச்சுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி, திசைகாட்டி சின்னத்தில் களமிறங்கும் நிலையில், பாரிய கூட்டணிக்குரிய முயற்சியில் எதிரணிகளே ஈடுபட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றை ஒன்றிணைக்கும் முயற்சி இடம்பெற்று வருகின்றது.

அத்துடன், இடதுசாரிக் கட்சிகளை ஒன்றிணைத்து கதிரை சின்னத்தில் களமிறங்குவதற்குரிய கலந்துரையாடல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஈடுபட்டுவருகின்றது. 03




தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போது கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட நிலையில் அதிகம் துள்ளிக் குதித்து வருபவருமான மருத்துவர் சி.சிவமோகன் நல்லாட்சிக் காலத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராகவும் செயல்பட்டவர்.

அவர் தொடர்புபட்ட ஒரு விவரம் இது. அவர் எம்.பியாக இருந்த காலத்திலேயே கட்சிக்குள் இது போன்ற வேறு விடயங்களுக்கான விசாரணைகளுக்கு சாத்தியம் எழுந்தும் அவை பின்னர் அடக்கப்பட்டன. அல்லது கைவிடப்பட்டன. தேவைப்பட்டால் அவற்றையும் கிளறிப் பார்க்கலாம். அது இருக்க, இப்போதைய விடயத்துக்கு வரலாம்.

சிவமோகன் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக இருந்த சமயம் தற்போதைய யாழ். மாவட்ட அரச அதிபராக இருப்பவரே பிரதேச செயலாளராக அங்கு பணியாற்றினார்.

இக் காலத்தில் முல்லைத்தீவு 05



# இலங்கைச் சுற்றுச்சூழல் நடவடிக்கை வலையமைப்பு ஆர்வமுள்ள ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடல்





சுற்றுச்சூழலில் ஆர்வமுள்ள ஊடகவியலாளர்களுடன் இலங்கை சுற்றுச்சூழல் நடவடிக்கை வலையமைப்பு (Sri Lanka Environmental Action Network: SLEAN) யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்திருந்தது.

இந்தக் கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்றது.

இலங்கையின் சுற்றுச்சூழல் சவால்களை இனங்கண்டு, தீர்வுகளை உருவாக்கும் நோக்கில் Save a Life இன் முன்முயற்சியாக செயல்படும் 'SLEAN' இன் நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தி அவர்களது செயற்பாடுகளையும் அதனூடான விழிப்புணர்வுகளையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான முயற்சியாகவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது வட மாகாணத்தில் சுற்றுச் சூழலுக்கு அச்சுறுத்தலாக உள்ள பல்வேறு பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. அவ்வாறான பாதிப்புகள் எவ்வாறு தோற்றம் பெறுகின்றன என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டு, அவ்வாறு மக்களுக்கும் பிரதேசங்களுக்கும் பிரச்சினைகள் உருவாகின்றமையைத் தவிர்த்துக் கொள்ளவது மற்றும் அவற்றை இல்லாதொழிக்க முன்னெடுக்கும் பொறிமுறைகள் தொடர்பில் மக்களுக்கு ஊடகங்கள் வாயிலாக கொண்டு சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தவது தொடர்பில் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# சுற்றுலாப் பயணிகள் அதிகளவானோர் வருகை

இந்த வருடத்தின் முதல் 9 நாள்களில் மாத்திரம் 70,944 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்தனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி இந்தியா, ரஷ்யா, அமெரிக்கா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளனர்.

அத்துடன் இந்தியாவிலிருந்து 11,789 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும் கடந்த ஆண்டு நாட்டிற்கு வருகைதந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2,053,465 என்பது குறிப்பிடத்தக்கது.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை அறிக்கையை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி பின்வாங்குவதேன்?

## காவிந்த ஜயவர்தன கேள்வி



"உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவம் குறித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை அறிக்கை, நாடாளுமன்ற தெரிவுக்குழு அறிக்கை ஆகியவற்றின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதி ஏன் பின்வாங்குகிறார். கடந்த அரசாங்கங்களை போன்று இந்த அரசாங்கமும் குண்டுத்தாக்குதல் விவகாரத்தை தமது அரசியல் வெற்றிக்காக பயன்படுத்திக் கொள்ள கூடாது என்பதை வலியுறுத்துகிறோம்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவம் இடம்பெற்று ஐந்தாண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும், இதுவரை நீதி கிடைக்கவில்லை. குண்டுத்தாக்குதலின் உண்மை தன்மை வெளிப்படுத்தப்படவில்லை.

ஆட்சிக்கு வந்து 3 மாத காலத்தில் உண்மை சூத்திரதாரியை பகிரங்கப்படுத்துவதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ வாக்குறுதியளித்தார். ஆனால் அவர் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் குண்டுத்தாக்குதல்கள் பற்றி பல்வேறு வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கியுள்ளார். தனது ஆட்சியில் உண்மையை பகிரங்கப்படுத்தி குற்றவாளிகளுக்கு தண்டனையளிப்பதாக குறிப்பிட்டுள்ளார். ஆகவே இந்த அரசாங்கத்திலாவது நீதி கிடைக்குமா என்பதை எதிர்பார்த்துள்ளோம்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் நாடாளுமன்ற தெரிவுக்குழு ஆகிய அறிக்கை சமர்ப்பித்துள்ளன.

இந்த அறிக்கையின் பரிந்துரைகளை முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் செயற்படுத்தவில்லை.

அறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்தினால் தனக்கு இணக்கமானவர்கள் நெருக்கடிக்குள்ளாகுவார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ குறிப்பிட்டார் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு அவதானம் செலுத்தினாரே தவிர இவ்விடயத்தில் கரிசனை கொள்ளவில்லை.

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இந்த பிரச்சினைகள் ஏதும் கிடையாது. ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை ஆகியவற்றின் பரிந்துரைகளை தாராளமாக நடைமுறைப்படுத்தலாம். இருப்பினும் அரசாங்கம் அது குறித்து கவனம் கொள்ளவில்லை.

குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பும் சந்தர்ப்பத்தில் கடந்த கால விசாரணைகளின் விபரங்களே குறிப்பிடப்படுகின்றன. புதிதாக எந்த தகவல்களும் குறிப்பிடப்படுவதில்லை.

கோட்டபய ராஜபக்ஷவை போன்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் குண்டுத்தாக்குதல் விவகாரத்தை தனது வெற்றிக்கு பயன்படுத்திக் கொண்டார் என்ற நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் தோற்றுவிக்க கூடாது.

30 வருட கால யுத்தத்தின் வடுக்கள் இன்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் உள்ளன அதே போன்று தான் குண்டுத்தாக்குதலின் பாதிப்பு இன்றும் எம் மத்தியில் உள்ளது.

தமதுஉறவுகள்ஏன்உயிரிழந்தனர்என்பதைஅறிந்துக்கொள்ளும் உரிமை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உண்டு. ஆகவே உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் உண்மையை வெளிக்கொண்டு வருவதற்கு தொடர்ந்து போராடுவோம்."– என்றார்.

---

## யாழில் ஹெரோயினுடன் இளைஞர் ஒருவர் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நகரில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டார்.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த 27 வயதான இளைஞரே யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் இருந்து 60 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரைப் பொலிஸார் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## சட்டவிரோத விசாவை பயன்படுத்தி ஜேர்மனிக்கு செல்ல முற்பட்டவர் கைது

போலி ஜேர்மனி விசாவை பயன்படுத்தி ஜேர்மனிக்கு செல்ல முற்பட்ட ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் எல்லை நிர்ணய கண்காணிப்பு பிரிவின் அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் யாழ்ப்பாணம் – இளவாலை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர், புதுடில்லி சென்று பின்னர் அங்கிருந்து, மற்றுமொரு விமானத்தில் ஜேர்மனி நோக்கி பயணிக்க முற்பட்ட சந்தர்ப்பத்திலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் வழங்கிய ஆவணங்களின் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட தொழில்நுட்ப சோதனையில் ஜேர்மனி நாட்டுக்கான விசா போலியானது என தெரியவந்துள்ளது.

---

## இந்தியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று சீதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி இந்தியப் பிரஜை சீதுவை வீட்டு வளாகத்தில் வாடகை வீட்டில் வசித்து வந்தார் என்று முதற்கட்ட பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சீதுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## உள்ளூராட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிங்கள தேசியவாத சக்திகளைக் கொண்டுள்ள சர்வஜன அதிகாரமும், புதிய கூட்டணியை உருவாக்குவதற்குரிய அரசியல் நகர்வுகளில் ஈடுபட்டு வருகின்றது.

சிலிண்டர் கூட்டணியில் சங்கமித்த மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் சிலர், மீண்டும் மொட்டுக் கட்சிக்குள் செல்வது பற்றி அவதானம் செலுத்தி, அதற்குரிய கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.





# ஜனாதிபதி அனுரவின் சீன விஜயம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது

## சீன வெளிவிவகார அமைச்சு

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் முதல் சீனப் பயணம், இருதரப்பு உறவுகளுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என சீனாவின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சீனாவில் செய்தியாளர் சந்திப்பொன்றில் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹுவா சுன் யிங், இதனைக் குறிப்பிட்டார்.

சீன ஜனாதிபதி ஸீ ஜின்பிங்கின் அழைப்பின் பேரில், எதிர்வரும் 14 ஆம் திகதி, சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளும் இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க சீனா ஜனாதிபதி ஸி ஜின்பிங் உடன் கலந்துரையாடுவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பிரதமர் லி கியாங் மற்றும் சீன தேசிய மக்கள் காங்கிரஸின் ஸாவோ லெஜி ஆகியோரையும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க சந்திப்பார் என சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் /ஹவா சுன் யிங் குறிப்பிட்டுள்ளார்.

# ஓய்வூதிய அதிகரிப்பு நடைமுறையை மீள அமுல்படுத்த புதிய அரசு தீர்மானம்



2020ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தால் இரத்துச் செய்யப்பட்ட ஓய்வூதிய அதிகரிப்பு நடைமுறையை மீண்டும் அமுல்படுத்த தற்போதைய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2016 ஜனவரி முதலாம் திகதி முதல் 2019 டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்காகவும் இந்த ஓய்வூதிய அதிகரிப்பு பெற்றுக்கொடுக்கப்படும் என தொழில் பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.



# சிறந்த குளிர்கால சுற்றுலா தளமாக தெற்கு கடற்கரை பெயரிடப்பட்டது

உலகப் புகழ்பெற்ற வோக் பத்திரிகை, உலகின் மிகச் சிறந்த குளிர்கால சுற்றுலா தளமாக இலங்கையின் தெற்கு கடற்கரையை பெயரிட்டுள்ளது.

கடலோரப் பகுதியின் இயற்கை அழகு மற்றும் கலாச்சார கூறுகளுக்கு மேலதிகமாக, சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு அனுபவங்களை பெற்றுத்தர கூடிய வகையில் அமைந்துள்ளதாக அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

அழகிய கடற்கரைகள், வனவிலங்குகள் மற்றும் தேயிலைத் தோட்டங்கள் போன்ற சுற்றுலா தலங்கள் காரணமாக, உலகெங்கிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை இலங்கை ஈர்த்துள்ளதாக வோக் பத்திரிகை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவின் 02 ஆம் வட்டாரம், கோம்பாவில் என்னும் முகவரியில் வசித்துவரும் திருமதி.த.றோகினி என்பவருக்கு அவரது தந்தையால் சீதனமாக வழங்கப்பட்ட – வருடாந்த அனுமதிப் பத்திரத்தைக் கொண்ட – 3 ஏக்கர் நிலத்தை அவர் சிவமோகனின் சகோதரனும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உத்தியோகத்தருமான சிவஜெயந்தன் என்பவரிடம் பராமரிப்பிற்கு கையளித்துவிட்டு இந்தியாவிற்குச் சென்றிருக்கின்றார்.

இந்தியா சென்ற றோகினி நாடு திரும்பி தனது நிலத்தை கோரிய சமயம் அரை ஏக்கர் மட்டுமே திரும்பி ஒப்படைக்கப்பட்டது. மிகுதி 02 ஏக்கர் 10 பேர்ச் காணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தரான சிவஜெயந்தன் என்னும் சிவமோகனின் சகோதரனின் பெயரில் காணி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் தனது நிலத்தை மீட்டுத் தருமாறு றோகினி 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அரச அதிபருக்கு எழுத்தில் முறையிட்டுள்ளார். இதன் அடிப்படையில் இடம்பெற்ற விசாரணைகளிலேயே இந்தத் தில்லுமுல்லு விவரம் வெளியாகியுள்ளது.

அரச வேதனம் பெறும் அரச ஊழியரோ, வருடாந்தம் 36 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவரோ இத்தகைய வருடாந்தம் புதுப்பிக்கும் வகையிலான அரச காணிகளைப் பெற்றுக் கொள்ள முடியாது.

இவ்வாறு காணி அனுமதிப் பத்திரம் பெற்ற மருத்துவர் சிவமோகனின் சகோதரனான சிவஜெயந்தன் ஓர் அரச உத்தியோகத்தராக உள்ளபோதும் அதனை மறைத்து – மாதாந்தம் 35 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வருமானம் பெறும் அவர் தனது வருட வருமானம் வெறும் 32 ஆயிரம் ரூபா என வெளிப்படுத்தி – இந்தக் காணியை அரசிடம் இருந்து பெற்றுக் கொண்டார் எனபதும் –

அச்சமயம் அவருக்கு வருட வருமானம் 32 ஆயிரம் ரூபாவுக்கு மேல் இல்லை என்பதை அப்போதைய பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தியதன் அடிப்படையிலே காணி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதும் –

அச்சமயத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக மருத்துவர் சிவமோகனே செயற்பட்டார் என்பதும் – தற்போது விசாரணைகளில் அம்பலமாகியுள்ளன.

இவ் விடயம் ஆராயப்பட்டபோது சிவமோகன் அவர்களின் தாயாரின் பெயரிலும் ஓர் காணி அனுமதிப் பத்திரம் இப்படி வழங்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அரச ஓய்வூதிய வருமானம் பெறும் அவரது தாயாரும் இத்தகைய காணியைப் பெற முடியாது என்பதும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இவ்விடயங்கள் தொடர்பில் தற்போதைய ஆளுநரின் பணிப்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளிலேயே இவை அம்பலமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறீதரன் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“இந்தியாவில் இடம்பெறும் மாநாடு ஒன்றில் பங்குகொள்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக இந்தியா புறப்படச் சென்ற போது அங்கே விமான நிலைய அதிகாரிகளால் நீண்ட நேரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் பயணத்துக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இராஜதந்திரக் கடவுச்சீட்டை வைத்திருக்கும் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்வாறு நடத்தப்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாது.

சிவஞானம் சிறீதரன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக இருப்பதுடன் அவர் இலங்கை நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் விளங்குகின்றார்.

இந்த நாட்டில் இறுதியாக இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பாக அநுர அரசைக் கடுமையாக விமர்சித்து உரையாற்றியும் இருந்தார்.

இந்நிலையிலேயே இவர் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் பயணிக்க அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனவே, இந்தச் சம்பவம் ஒரு பழி வாங்கும் சம்பவமாக இருக்கலாம் என்ற சந்தேகமும் எமக்குத் தோன்றுகின்றது.

இனிமேலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அநுர அரசுக்கு உள்ளது.

ஆகவே, எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரை அவமானப்படுத்தும் வகையில் அநுர அரசு செயற்படுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். தமிழர் விவகாரங்களில் கடந்த கால அரசுகளைப் போன்று இந்த அரசும் செயற்படுவதை அனுமதிக்க முடியாது.” – என்றார்.



# இராஜாங்கனை, அங்கமுவ ஓயா நீர்த்தேக்கங்களில் வான்கதவுகள் திறப்பு

நிலவும் மழையுடனான காலநிலையினால் இராஜாங்கனை மற்றும் அங்கமுவ ஓயா ஆகிய நீர்த்தேக்கங்களில் சில வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் ஆறு வான்கதவுகள் ஐந்து அடி அளவு திறக்கப்பட்டுள்ளன.

அங்கமுவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள் இரண்டு அடி வரை திறக்கப்பட்டுள்ளதாக அந்த நீர்த்தேக்கங்களுக்கு பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# பல பகுதிகளில் இன்று கடும் மழை



வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் இன்று மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அதற்கமைய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும், பொலன்னறுவை மாவட்டத்தின் சில இடங்களிலும் 100 மில்லி மீற்றர் அளவில் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

இடியுடன் கூடிய மழை பெய்யும்போது, தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கத்தால் ஏற்படும் சேதங்களைக் குறைத்துக் கொள்வதற்கு போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை கோரியுள்ளது.













# வேகமாக செலுத்தும் சாரதிகளை அடையாளம் காண வேகமானிகள்

அதிக வேகத்துடன் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை அடையாளம் காண 91 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான 30 வேகமானிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த 30 வேகமானிகளும் பொலிஸ் போக்குவரத்து உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதற்கான நிகழ்வு பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த விஜேசூரியவின் தலைமையில் நேற்று முற்பகல் பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்றது.

அதன்படி, அதன் முதற்கட்டமாக நீர்கொழும்பு, களனி, கம்பஹா ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு பொறுப்பான அதிகாரிகளுக்கும், மேல் மாகாண தெற்கு போக்குவரத்து பிரிவு பணிப்பாளருக்கும் அமெரிக்க தயாரிப்பிலான மேற்படி வேகமானிகள் வழங்கப்பட்டுள்ளன.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கல்வியே நம் பலம்

யாழ். உயர் கல்விக் கண்காட்சியை நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இரண்டு விடயங்களைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

ஒன்று - வடக்கு மாகாணத்தின் முக்கிய சொத்து கல்விதான் என்பது.

மற்றது - வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்விக்காக இங்கு சில துறைகளை தேர்ந்தெடுக்காமையால் இங்குள்ள வெற்றிடங்களுக்கு வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர்களை சேர்க்க வேண்டியுள்ளது என்பது.

இரண்டுமே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்.

புற எதிர்ப்புக்களால் அழிக்கப்பட முடியாத செல்வம் கல்வி ஒன்றே. ஆனால் அந்தக் கல்விச் செல்வத்தை நாம் ஈட்டி வைத்திருந்தால் மாத்திரமே புறதரப்புகள் அவற்றை அழிக்க முடியாது. அத்தகைய கல்விச் செல்வத்தை ஈட்டுவதில் நமது சமூகம் முழு முனைப்புடன் முயற்சிக்கின்றதா என்பதுதான் கேள்வி.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இலங்கைத் தீவில் அதி உச்ச கல்வி நிலையில் தமிழர்கள் விளங்கினர் என்பது மிகையல்ல.

ஆனால் கால கதியில் நிலைமை மாறிவிட்டது. கல்வித் துறையில் தமிழர்கள் உச்சத்தில் இருந்தமையும் அவர்களுக்கு எதிரான இன வெறுப்புணர்வு வெளிப்படுவதற்கான ஒரு காரணமாக இருந்தது என்பதும் மறுப்பதற்கில்லை.

தமிழரைக் கல்வித்துறையில் வீழ்த்துவதற்காகவே மாவட்ட ரீதியிலான பல்கலைக்கழக அனுமதி முறை - கோட்டா முறை - சிறிமாவோவின் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டது.

உயர்கல்வியில் தமிழர்களுக்கு முறையற்ற விதத்தில் அனுமதி மறுக்கப்பட்டதும் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஆயுத ரீதியில் திரும்பி உச்சம் பெறுவதற்குக் காரணமாக அமைந்தது.

எது, எப்படியாயினும் கடந்து வந்த மாவட்டக் கோட்டா அனுமதி முறை, யுத்தம், இன ஒடுக்கு முறை போன்ற சகலவற்றாலும் இப்போது பின்னடைவு நிலையை தமிழர் கல்வித்துறை எட்டி நிற்பதும் மறைக்க முடியாத உண்மை.

யுத்த காலத்தில் கூட பாடசாலைகள் மட்ட தேசியப் பரீட்சை முடிவுகளில் மாகாண ரீதியில் முதல் இரண்டு இடங்களில் இருந்த வடக்கும் கிழக்கும் இப்போது கடைசி நிலையில் இருக்கின்றன.

இந்தப் பின்புலத்தில் உயர்கல்விக்குக் கிடைக்கும் வாய்ப்புகளை முழு அளவில் பயன்படுத்தத் தவறுகின்ற போக்கும் தொடருமானால் கல்வி நிலையில் நமது தமிழர் தாயகம் மேம்படுவது துர்லபமாகி விடும்.

உயர் கல்வி என்ற பெயரில் கிடைக்கின்ற வாய்ப்புக்களை பெற்றுக் கொண்டு நமது சமூகம் தமிழர் தாயகத்திலிருந்து புலம்பெயர்வதும், இங்கு கிடைக்க கூடிய வாய்ப்புகளை வடக்கு ஆளுநர் சுட்டிக் காட்டுவது போல பிற தரப்பினருக்கு அளிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதும் நமது தமிழர் தாயகத்துக்கு பெரும் பாதிப்பை தரப்போகின்ற விடயங்களாகும்.

போர் நலிவினாலும், தொடர்ந்து வந்த பின்னடைவுகளினாலும் துவண்டு கிடக்கும் தமிழர் தாயகம் மீண்டும் நிமிர வேண்டுமானால் கல்வித் துறையைச் சரிவரப் பயன்படுத்தி நமது சமூகக் கட்டமைப்பை நாம் பலப்படுத்த வேண்டும்.

சமூகப் பெரியார்கள், அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், கல்விப் புலத்தவர்கள் ஒன்றிணைந்து தம் கவனத்தைச் செலுத்தித் திட்டமிட்ட முறையில் கல்வித்துறை மேம்பாட்டை ஊக்குவிக்க முன்வர வேண்டும். வடக்கு ஆளுநர் போன்றோர் அதற்கான முன்முயற்சிகளை எடுப்பது பொருத்தமாக இருக்கும். தவறாமல் செய்ய வேண்டிய முக்கிய பணி இதுவாகும்







# நியூஸிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி 140 ஓட்டங்களால் வெற்றி

நியூஸிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 140 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

நேற்றைய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 8 விக்கெட்களை இழந்து 290 ஓட்டங்களை பெற்றது.

அணி சார்பில் பெத்தும் நிஸ்ஸங்க 66 ஓட்டங்களையும் குசல் மெண்டிஸ் 54 ஓட்டங்களையும் ஜனித் லியனகே 53 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பில் மெட்ஹென்றி 4 விக்கெட்களை கைப்பற்றினார்.

291 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 29 ஓவர்கள் 4 பந்துகள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 150 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

நியூஸிலாந்து அணி சார்பில் ஆயசம ஊாயிஅயெ 81 ஓட்டங்களை பெற்றார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் அசித பெர்னாண்டோ, மஹீஷ் தீக்ஷன மற்றும் எஷான் மாலிங்க ஆகியோர் தலா 3 விக்கெட்களை கைப்பற்றினர்.

எவ்வாறாயினும் 3 போட்டிகளை கொண்ட இந்த தொடரை 2-1 என்ற கணக்கில் நியூஸிலாந்து அணி கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

















**கேள்வி : நீங்கள் சென்றமுறை அளித்த பதிலில், நீங்கள் கௌசல்யாவிடம் மன்னிப்புக் கேட்டிருப்பதாக 'தமிழடியான்' என்பவர் 'யூடியூப்பில்' பேசியிருக்கிறார். அது உண்மையா?**

பதில் : உண்மைதான்! எங்களால் எவர்க்கேனும் காரணமின்றி மனவருத்தம் ஏற்பட்டிருந்தால் அதற்காக மன்னிப்புக் கோருவதில் எந்தத் தவறும் இருப்பதாய்ப் படவில்லை.

தவறுதலாக நடந்துவிட்ட ஓர் பிழையை கண்ணகி சுட்டிக் காட்டியதும் பாண்டியன் தன்னை நியாயப்படுத்த தர்க்கங்கள் ஏதும் செய்யாமல் 'யானோ அரசன்?, யானே கள்வன்!' எனக்கூறி உயிர் விட்டதாய் சிலப்பதிகாரம் பேசுகின்றது.

திருவள்ளுவர் தனக்கு சமம் இல்லாதவர் இடத்தும் பிழையை ஒத்துக் கொள்ளுதல் சான்றோர்களின் கடமை என்கிறார். (சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல்) அதுதான் தமிழர் பண்பு. அதைத்தான் நானும் செய்தேன்.

நான் முன்பு அளித்த எனது பதிலில் பிழையேதும் செய்திருக்கவில்லை. கௌசல்யா மனவருத்தப்பட அப்பதிலில் ஒன்றுமே இருக்கவில்லை என்பதுதான் உண்மை.

கொஞ்சக்காலமாக கௌசல்யாவின் கருத்துக்களை, அவரே உரைக்காமல் அர்ச்சுனாவும், தமிழடியானும் தான் உரைத்து வருகின்றார்கள். அதற்கு கௌசல்யாவின் மௌனமும் சம்மதச் 'சிக்னல்' காட்டுவதால், என் பதிலைக் கண்டு பாவம் அந்தப்பெண்ணும் வருந்தியிருக்குமோ? என ஐயப்பட்டுத்தான் அதற்காக மன்னிப்புக் கோருவதாக எழுதியிருந்தேன்.

இவை தமிழர் பண்பாடு சார்ந்த விடயங்கள். இதெல்லாம் பாவம் 'தமிழடியானுக்கு' எங்கே தெரியப்போகிறது?

❇ ❇ ❇ ❇ ❇ ❇ ❇

**கேள்வி : டாக்டர் அர்ச்சுனா உங்களைப் பற்றி மிகக் கேவலமாகப் பேசி, ஓர் காணொலி அறிக்கை விட்டிருக்கிறார். அதற்கு நீங்கள் பதிலேதும் சொல்ல வேண்டாமா?**

பதில் : இது சம்பந்தமாக மனதில் வந்த சில எண்ணங்களை மட்டும் கீழே தருகிறேன்.

- எனக்கு என்னைத் தெரியும். என்னைச் சார்ந்தவர்களுக்கும் என்னைத் தெரியும். அவ்வளவும் எனக்குப் போதுமானது. அறிவிலிகளின் கருத்துக்களுக்கு எப்போதும் நான் செவி சாய்ப்பதில்லை.
- அவரது பேச்சுப் பற்றி நான் கவலைப்பட ஒன்றுமேயில்லை. வாய் கூசாது பேசிய அவரது பேச்சைக்கேட்டு அவருக்கு வாக்களித்தவர்கள்தான் கவலைப்பட வேண்டும்.
- மிக விரைவில் நாடாளுமன்றத்துக்குள் 'தூஷண' வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.
- 'பத்தைக்குள் எறிய முயல் வெளிக்கிட்ட கதை' – என்று ஊரில் ஒரு பழமொழி சொல்வார்கள். 'தமிழடியான்', 'அர்ச்சுனா' ஆகியோர் படும்பாட்டைக்கண்டால் இந்தப் பழமொழிதான் ஞாபகத்திற்கு வருகிறது.
- அர்ச்சுனாவின் வார்த்தைப் பிரயோகங்கள், 'நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும் குலத்தில் பிறந்தார் வாய்ச் சொல்.' என்ற திருக்குறளை ஞாபகப்படுத்துகின்றன.
- தனக்கு எதிராகப் பேசுபவர்களின் மேல் 'சேறு பூசி', அவர்களை வாய் அடைக்கச் செய்யும், உத்தியைத்தான் அர்ச்சுனா, கடைப்பிடித்து வருகிறார். அந்த உத்தி என்னிடம் செல்லாது என்பதை அவர் விரைவில் உணர்வார்.
- அர்ச்சுனாவின் தூற்றுதல்களுக்கு நான் பதில் சொல்லத் தேவையில்லை. விரைவில் இயற்கையே அவருக்குப் பதிலளிக்கும் என நம்புகிறேன்.

❇ ❇ ❇ ❇ ❇ ❇ ❇

**கேள்வி : நீங்கள்தான் அர்ச்சுனாவுடன் முதலில் கொழுவப்போனதாக அர்ச்சுனா கட்சிக்காரர் சிலபேர் சொல்லித்திரிகிறார்களே. அப்படி நீங்கள் என்னதான் சொன்னீர்கள்?**

பதில் : அர்ச்சுனா எதைச் செய்தாலும், அவரைக் காப்பாற்ற நினைக்கும் சில அறிவிலிகள்தான் அப்படிச் சொல்லித் திரிகிறார்கள். தாம் கொடுக்கும் கண்மூடித்தனமான ஆதரவால், அர்ச்சுனா தன் பெயரையும் கெடுத்து, நம்மினத்தின் பெயரையும் கெடுக்கிறார் என்பதுகூட அந்த மூடர்களுக்கு ஏனோ தெரியவில்லை.

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

இனி உங்கள் சந்தேகத்தைத் தீர்க்கிறேன். அடுத்த மேயர் யாராய் இருப்பார்? என்ற கேள்விக்கு அர்ச்சுனா அணி வென்றால் மேயராகப் போவது 'தங்கமான தங்கம்தான்' எனப் பதிலளித்திருந்தேன். அதில் கௌசல்யாவிற்கு என்ன இழிவு ஏற்பட்டிருக்கிறது? என்று எனக்குப் புரியவேயில்லை. இன்னும் சொல்லப்போனால் நான் அவரைப் பெருமைப் படுத்திப் பதிலுரைத்திருக்கிறேன் என்பதுதான் நிஜம்.

எனது இப்பதிலுக்குப் பிறகு, என்னை இழிவு படுத்துவதாய் நினைந்து கௌசல்யாவிடம் 'அதை வாங்கித் தருகிறேன்', 'இதை வாங்கித்தருகிறேன்' என்றெல்லாம் பேசிவரும் அர்ச்சுனாதான், அந்தப் பெண்ணை அநியாயத்திற்கு அசிங்கப்படுத்தி வருகிறார். இதையும் நியாயப்படுத்துபவர்களை நான் என்ன சொல்ல? இத்தகையவர்களைத் தொலைத்தால்தான் அர்ச்சுனா போன்றவர்கள் உருப்பட வாய்ப்பிருக்கிறது.

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊

**கேள்வி : உங்களை வேண்டுமென்றே வம்பிற்கு இழுக்கிறார்கள். அதையெல்லாம் பார்த்தும் பாதிப்பின்றி அசையாது நிற்கிறீர்கள். எப்படி இது உங்களால் முடிகிறது?**

பதில் : நான் ஒரு தாமரை இலை. இவர்கள் அள்ளித் தெளிக்கும் குற்றங்கள் எவையும் என்மேல் ஒட்டப்போவதில்லை. அதனால் துன்பம் என்னைக் கிட்டப் போவதில்லை.

விவேகானந்தர் பற்றி ஒரு கதை சொல்வார்கள். அக் கதை உண்மையில் நடந்ததா? இல்லையா? என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அக்கதை எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

ஒரு நாள் விவேகானந்தர் ரயில் ஒன்றில் பயணஞ் செய்து கொண்டிருந்தாராம். அப்போது அவருக்கு முன்னால் இருந்த இருக்கையில் வந்தமர்ந்த சில நாகரீக இளைஞர்கள், விவேகானந்தரை யாரோ ஒரு 'பண்டாரம்' என நினைந்தும், இவருக்கெங்கே ஆங்கிலம் தெரியப் போகிறது என நினைத்தும், வழிநெடுக விவேகானந்தரை ஆங்கிலத்தில் கிண்டல் செய்தபடி வந்தார்களாம்.

இடையில் வந்த டிக்கெட் பரிசோதகர் ஒருவர், விவேகானந்தரைத் தெரிந்து அவரை வணங்கினாராம். அவர் ஆங்கிலத்தில் பேச, விவேகானந்தர் அவரோடு உயர்தரமான ஆங்கிலத்தில் உரையாடினாராம்.

அது கண்டு அதிர்ந்து போன இளைஞர்கள், பரிசோதகர் சென்ற பிறகு, விவேகானந்தரை நோக்கி, 'இதுவரை நாங்கள் உங்களைப் பற்றித் தரக்குறைவாகப் பேசிக் கொண்டு வந்தோம். அதையெல்லாம் கேட்டும், கோபப்படாமல் உங்களால் எப்படி இருக்க முடிந்தது?' என்று கேட்டனராம்.

அதற்கு விவேகானந்தர், 'நான் முட்டாள்களைச் சந்திப்பது இது முதற் தடவையல்ல' என்று கூறி விட்டு இறங்கிச் சென்றாராம். உங்கள் கேள்விக்கும் விவேகானந்தரின் பதில்தான் பதிலாகிறது.

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊

**கேள்வி: ஐயா நெஞ்சமெல்லாம் பதறுகிறது. அர்ச்சுனா என்கின்ற அந்த அற்பப்பதர் நாகரீகம், பண்பாடு என்கின்ற எல்லைகளைக் கடந்து, சிறிதும் கூச்சமில்லாமல் உங்களைப் பற்றிய கீழ்மையான உரைகளைப் பதிவிட்டுக் கொண்டே இருக்கிறான். கடைசியாய் அவன் வெளியிட்ட 'சிவ சிவ' பதிவைப் பார்த்து அதிர்ந்து போனேன். அந்தப் பதிவு கூடவா உங்களை ஆத்திரப்படுத்தவில்லை?**

பதில் : முதலில் நீங்கள் அமைதியடையுங்கள்! நாங்கள் நாகரீகமாகவே பேசுவோம்.

அர்ச்சுனா, என்னை இழிவுபடுத்துவதாய் நினைந்து, உலகிற்குத் தான் யார் என்பதைத் தொடர்ந்து அடையாளப்படுத்தி வருகிறார். அது நல்லது தானே? நான் வரையறையற்ற 'வசவுகளை'த் தாங்கியேனும், ஒரு பிழையானவரைத் தேர்ந்தெடுத்த இனத்தை, கண் விழிக்கச் செய்வதில் எனக்கு மகிழ்ச்சிதான்.

அர்ச்சுனா என்னை இழிவுபடுத்தவில்லை, கௌசல்யாவைத்தான் இழிவுபடுத்தி வருகிறார். ஒரு திருமணமாகாத இளம் பெண்ணைப்பற்றி, இப்படியெல்லாம் பேச அவருக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள்? அவரது அந்த உரைக்குக் கீழே, பதிவாகியிருக்கும் 'கொமன்ஸ்களை' எடுத்துப் பாருங்கள். அர்ச்சுனா தன் பேச்சால், கௌசல்யாவை எவ்வளவு கீழ்மைப்பட வைத்திருக்கிறார் என்பது புரியும்.

எங்கள் ஊரில் கள்ளுக்கடை வாசலில், நிறைவெறியில் நிற்கும் குடிகாரன் ஒருவன்கூட இத்தகைய வார்த்தைகளைப்பேசி நான் கேட்டதில்லை. அவர் பேசிய அத்தனையும் செவி கைக்கும் சொற்கள். என்னைக் காரணமாக வைத்து விதி அர்ச்சுனாவைத் துரத்தத் தொடங்கி விட்டது என்று நினைக்கிறேன்.

தங்கம் என்று சொல்லிக் கௌசல்யாவை இழிவு செய்துவிட்டார். அவமரியாதை செய்துவிட்டார் என்றெல்லாம் பொய்க் கொந்தளிப்புக் காட்டிய 'தமிழடியான்', அர்ச்சுனா அப்பெண் பற்றிப் பேசும் 'அழுக்குகளையெல்லாம்' இரசித்து வருகிறார்போல. ஈனர்களுக்கு ஏது மானம்? விட்டுவிடுவோம்.

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊

**கேள்வி : ஐயாவிற்குத் தேவையில்லாத வேலை இது. இத்தகைய கீழ் மக்களின் வாயில் தானாய்ப் போய் ஏன் விழுகிறார்? துஷ்டர்களைக் கண்டால் தூர விலக வேண்டியது தானே? என்கிறார்கள் சிலபேர். நீங்கள் அவர்கள் சொல்வது போல் நடந்து கொண்டால் என்ன?**

பதில் : 'துஷ்டர்களைக் கண்டால் தூர விலகு' என்று சொல்லுகிறவர்கள், தங்கள் வீட்டிற்குள் ஒரு துஷ்டன் நுழைந்து கீழ்மைகள் செய்தால், மேற்சொன்ன தொடரைச் சொல்லிவிட்டு, பேசாமல் இருப்பார்களா? 'எங்கள் வீட்டிற்குத் தீமை நடந்தால், எப்படி நாங்கள் அதைப் பார்த்திருக்க முடியும்?' என்று கொதிப்பார்கள்தானே? அதைத்தான் நானும் செய்கிறேன்.

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

அவர் அவர்க்கு, அவரவரின் வீடுதான் வீடு. அவரவர் உறவுதான் உறவு. எனக்கோ இந்த நாடுதான் வீடு. நம் இனந்தான் உறவு. அதனால் எனக்கு எந்தப் பாதிப்பு வந்தாலும், என் நாட்டிற்கும், என் இனத்திற்கும் தீமை செய்கிற எவரையும் கண்டிக்காமல், நான் இருக்கப் போவதில்லை. துஷ்டர்களைக் கண்டு தூர விலகியோட இறைவன் என்னைப் படைக்கவில்லையென நினைக்கிறேன்.

❇ ❇ ❇ ❇ ❇ ❇ ❇

**கேள்வி : உங்களது, ஒழுக்கம் பற்றி இழிவு செய்து பேசும்போது கூடவா உங்களுக்குக் கவலை வராது?**

பதில் : ஒழுக்கம் உள்ளவர்கள் அப்படிப்பேசினால் நிச்சயம் கவலைப்படுவேன்.

❇ ❇ ❇ ❇ ❇ ❇ ❇

**கேள்வி : புலம்பெயர்ந்த மக்களில் சிலர், அர்ச்சுனாவை ஏன் இவ்வளவு விரும்புகிறார்கள் என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா?**

பதில் : இத்தகைய கேள்விகளைக் கேட்டு, உண்மையான பதிலை என்னைக் கொண்டு சொல்ல வைத்து, என்னைப் புலம்பெயர்ந்த மக்களின் பகைவன் ஆக்குவதில் உங்களுக்கு அப்படியென்ன மகிழ்ச்சியோ தெரியவில்லை. ஆனாலும் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியது எனது கடமை. அதனாற் சொல்லுகிறேன்.

உங்கள் கேள்வியில் இடப்பட்டிருக்கும் 'சிலர்' என்ற வார்த்தை மிக முக்கியமானது. நான் கீழே எழுதப்போகும் பதிலும் அந்த சிலரை நோக்கியதுதான் என்பதை முன்னரே சொல்லி விடுகிறேன்.

போரின் கடுமையான பாதிப்பிற்கு அஞ்சி, தம் உறவுகளை எல்லாம் கைவிட்டுவிட்டு, பொய்களும், களவுகளும் செய்து, மறைந்த போராளிகளைக் கற்பனையாய், தமக்கு ஒன்றுவிட்ட, ஒன்றுவிட்ட, ஒன்றுவிட்ட உறவுகளாய்க் காட்டி, வெளிநாடுகளில் நல்வாழ்வைத் தேடிக் கொண்ட சிலருக்கு, பொழுதுபோக்க வார்த்தையாடுவதற்கு, தாய் நாட்டில், ஏதேனும் பிரச்சினை நடந்து கொண்டே இருக்க வேண்டும். அதைக் கேட்டு விமர்சித்துக் கொண்டிருப்பதுதான், அவர்களது தாய்நாட்டுப் பற்றாம்!

போர் முடிவதற்கு முன்பு, இயக்கங்களின் சண்டையைப் பாதுகாப்பாக இருந்து கொண்டு, கை தட்டி இரசித்துப் பழகியவர்கள் இவர்கள். இராணுவ வீரர்கள் என்றில்லாமல், நம் போராளிகளின் மரணங்களையும், தம் சுவைக்காகக் கூட்டி உரைத்து மகிழ்ந்தவர்கள் அவர்கள். பத்துப் பேர் இறந்தார்கள் என்று செய்தி வந்தால், 'சீ.சீ இவங்கள் ஒளிக்கிறாங்கள். நூறு பேராவது முடிந்திருப்பாங்கள்' என்று சொல்லித் தமக்குத்தாம் பொய்யான 'டென்ஷனை' உருவாக்கி, மகிழ்ந்தவர்கள் இவர்கள்.

போர் முடிந்து போனதும், இவர்களுக்குச் 'சீ' என்று ஆகிவிட்டது. யாராவது சண்டை கிளப்ப மாட்டார்களா? குழப்பம் விளைவிக்கமாட்டார்களா? என்று காத்திருந்த இவர்களுக்கு, அர்ச்சுனாவின் முரட்டுச் செயல்கள் பிடித்துப்போக, அவரை வளர்த்துவிட்டு, இங்கு எப்போதும் குழப்பத்தை உண்டாக்கி, தம் இரசனைக்குத் தீனி போட விரும்பிய இவர்கள்தான் நீங்கள் சொன்ன அந்தச் சிலபேர்.

அங்கிருந்து வரும் காசில் வாழ்ந்து வரும் நம்மவர் சிலருக்கு, வெளிநாட்டில் வாழும் கோட்டும், சூட்டும் போட்ட, அண்ணாவோ, மாமாவோ சொல்வதுதான் வேதவாக்காய்த் தெரிகிறது. அத்தகையவர்களின் புண்ணியத்தால்தான், இருபதாயிரம் வாக்குகள் அர்ச்சுனாவின் உண்டியலில் விழுந்தன.

அர்ச்சுனாவிற்கும் இந்த உண்மை தெரிந்திருக்கும் போல. தான் போடும் சண்டைகள்தான், தனது உண்டியலை மேலும் மேலும் நிரப்பும் எனக் கருதியே, அவர் நம் இனத்திற்கே உரிய ஒழுக்கம், பண்பாடு, நாகரீகம் என்பவற்றையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, நாளுக்கு நாள் ஒவ்வொரு சண்டையாய்ப் போட்டுக் கொண்டிருக்கிறார்.

இனத்தையும் தேசத்தையும் விட, அவர் கௌசல்யாவைப்பற்றிப் படும், கடும் கவலை, அவர் நம்மினத் தலைமைக்கு உரியவரா? இல்லையா? என்பதை நாளாந்தம் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. பாவம்! அந்தப் பெண்ணை மட்டுமல்ல, நம் இனத்தையும் இவரிடமிருந்து கடவுள்தான் காப்பற்ற வேண்டும்.

❇ ❇ ❇ ❇ ❇ ❇ ❇

**கேள்வி : நம் சமூகத்தின் 'பெரிய மனிதர்கள்' யாரும் அர்ச்சுனாவின் இத்தகைய இழிசெயல்களைக் கண்டிக்காமல் இருப்பது ஏன்?**

பதில் : 'கொமன்ஸ்' எழுதுகிறவர்களும் சில 'யூடியூப்'காரர்களும் கண்டித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். 'பெரிய மனிதர்கள்' என்று சொல்லப்படுவோர் அர்ச்சுனாவின் 'அஸ்திரங்கள்' தங்கள் மீதும் பாய்ந்துவிடலாம் என்று, பயப்படுகிறார்களோ என்னவோ?

❇ ❇ ❇ ❇ ❇ ❇ ❇

**கேள்வி : என்ன? உங்களது மாணவர் குழாம், அர்ச்சுனாவிற்கு எதிராக, களத்தில் இறங்கிவிட்டாற் போல் தெரிகிறதே!**

பதில் : உண்மைதான்! ஆனால், நான் கேட்டுக் கொண்டு அவர்கள் அதைச் செய்யவில்லை. அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும் என, நான் எதிர்பார்க்கவும் இல்லை. 'என்னையே நோக்கி நான் இந் நெடும்பகை தேடிக்கொண்டேன்' என்பதுதான் உண்மை.

முதற் குரல் கொடுத்து, மற்றவர்களையும் 'உசுப்பேத்திவிட்ட' வாசுதேவாவிற்கும், அவரைப் பின் தொடர்ந்த மற்றையவர்களுக்கும் எனது நன்றிகள். என் சார்பாக பேசியதற்காக அல்ல. உண்மையின் சார்பாக பேசியதற்காக 'கேட்டிலும் உண்டு ஓர் உறுதி கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல்' என்ற வள்ளுவனின் குறளை நினைந்து கொண்டிருக்கிறேன்.





# தடுமாறும் அநுர அரசு எரிச்சலில் மக்கள்!



**புருஜோத்தமன் தங்கமயில்**

இதுவும் ஒரு தேர்தல் ஆண்டு. நல்லாட்சிக் காலத்தில் ஒத்தி வைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலையும், கடந்த ரணில் ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுத்திருக்கின்றது. தேர்தல்களை நடத்துவதற்கான நிதி ஒதுக்கீடுகளை செய்வது தொடர்பில் அரசாங்கம் நெருக்கடிகளைச் சந்தித்தாலும், அதனை எதிர்கொண்டு எப்படியாவது இரு தேர்தல்களையும் நடத்திவிட வேண்டும் என்று அரசாங்கம் முனைப்பாக இருக்கின்றது. புதிய ஆட்சியாளர்கள் மீது பெரும் நம்பிக்கையோடு மக்கள் வாக்களித்திருந்தார்கள். ஆனால், அந்த நம்பிக்கைகள் மெல்ல மெல்ல அடிவாங்கத் தொடங்கி, விமர்சனங்கள் மேலெழத் தொடங்கிவிட்டன. இந்த விமர்சனங்கள் மக்களின் கோபமாக மாறுவதற்கு முன்னராக, தேர்தல்களை நடத்தினால்தான், உள்ளூராட்சி மன்றங்களையும் மாகாண சபைகளையும் கைப்பற்ற முடியும். அதனைக் கருத்தில் கொண்டு தேர்தல்களை விரைவாக நடத்துவதில் தேசிய மக்கள் சக்தி கவனமாக இருக்கின்றது.

அத்தோடு, மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு இந்தியாவும் அநுர குமார திஸநாயக்கவிடம் அழுத்தங்களை வழங்கியிருக்கின்றது. அது, பொருளாதார ஒத்துழைப்புக்களின் போக்கில், செய்து முடிக்கப்பட வேண்டிய கடப்பாடாகவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கின்றது. ஏனெனில், எதிர்க்கட்சியில் இருந்த காலம் முழுவதும் இந்திய எதிர்ப்பு என்ற நிலைப்பாட்டில் நின்ற, தேசிய மக்கள் சக்தி முகத்தில் இன்றிருக்கும் ஜே.வி.பி, ஆட்சிக்கு வந்ததும் கடந்த காலத்தில் இந்தியா தொடர்பில் காட்டிய எதிர்ப்பை நீர் ஊற்றி அணைத்திருக்கின்றது. இப்போது, அந்தக் கட்சிக்குள் இருந்து எழும் சில இந்திய எதிர்ப்புக் குரல்கள், நீர் ஊற்றி அணைக்கப்பட்ட எதிர்ப்பில் இருந்து எழும் புகை போன்றது. சில காலத்துக்குள் அதுவும் அடங்கி விடும். எப்போதுமே, எதிர்க்கட்சியில் இருந்து விமர்சிப்பது என்பது இலகுவானது. பொறுப்புக்கள் அற்றது. ஆனால், ஆட்சியைப் பொறுப்பேற்று நடத்தும் போதுதான், அதன் கடப்பாடுகள் தரும் அழுத்தங்களின் வலி தெரியும் என்பதை, முதன் முதலாக ஆட்சிக்கு வந்திருக்கும் ஜே.வி.பி உணர்ந்திருக்கின்றது. அதனால்தான், அந்தக் கட்சியின் கடந்த கால எதிர்ப்புக் குரல்கள் அடங்கி சுரத்தை இழந்திருக்கின்றன. ஆட்சிக்கு வந்து சில மாதங்கள் கூட ஆகவில்லை. புதுத் தும்புத் தடிக்கு உண்டான ஆற்றலைக்கூட தேசிய மக்கள் சக்தி காட்டுவதற்கு சிரமப்படுகின்றது. புதுத் தும்புத் தடி சில நாள்களாவது ஒழுங்காகக் குப்பைகளை வாரிக் கூட்டும். ஆனால், தேசிய மக்கள் சக்தி, நினைத்ததைக் காட்டிலும் தடுமாறிக் கொண்டிருக்கின்றது. இந்த தடுமாற்றத்தின் மீதான விமர்சனங்களை, பாரம்பரிய அரசியல்வாதிகள் இலகுவாக மக்களிடம் கோபமாக மாற்றுவார்கள். ஏனெனில், அரசாங்கத்தின் இயந்திரமாக இருப்பவர்களில் பெரும்பான்மையினர், கடந்த கால பாரம்பரிய ஆட்சியாளர்களினால் உள்வாங்கப்பட்டவர்கள். அவர்களின் விசுவாசத்தை வைத்துக் கொண்டு, தேசிய மக்கள் சக்திக்கு ஆட்டம் காட்ட பாரம்பரியக் கட்சிகள் நினைக்கின்றன. இதனை, புதிய அரசாங்கத்தின் அமைச்சர்களே வெளிப்படையாக கூறும் அள

தொடர்ச்சி▼

# தடுமாறும் அநுர அரசு எரிச்சலில் மக்கள்!

தொடர்ச்சி▲

...வுக்கு நிலைமை நெருக்கடியானது.

எந்தவொரு புதிய அரசாங்கமும், அரச ஊழியர்கள் தொடர்பில் விமர்சனங்களை உடனடியாக வைப்பதில்லை. அவர்களை மெச்சிக் கொண்டு விடயங்களைக் கையாளவே முயன்றிருக்கின்றன. ஆனால், அநுரவும், புதிய அரசாங்கமும் அரச இயந்திரத்தினைக் கையாள்வது தொடர்பில் தடுமாறுகிறார்கள். ஜே.வி.பியாக அவர்கள் தொழிற்சங்கங்களைக் கையாண்டது போல, இப்போது கையாள முடியவில்லை. அதனால், அவர்களினால் கடந்த காலத்தில் அறிவிக்கப்பட்ட புதிய புரட்சி மாற்றங்கள் தொடர்பிலான செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ளன. அதற்கு மாறாக, 'கிளீன் சிறீலங்கா' என்கிற விடயங்களை முதன்மைப்படுத்தி, விடயங்களை மடை மாற்றுகிறார்கள். கிளீன் சிறீலங்கா விடயங்களில் ஆரோக்கியமான கட்டங்கள் இருக்கின்றன. ஆனால், சாதாரண மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை முதலில் கையாண்டுவிட்டு, நாட்டைச் சுத்தப்படுத்தும் வேலைகளுக்குள் சென்றிருக்க வேண்டும். அத்தோடு, அதற்கான கால அவகாசகத்தை வழங்கி, திட்டத்தை முன்னெடுத்திருக்க வேண்டும். அதனைச் செய்யாது, அநுர அவசரப்பட்டு சுத்தப்படுத்த புறப்பட்டமை, கோட்டா காலத்து வீதி ஓரங்களில் வரையப்பட்ட ஓவியங்களுக்கு ஒப்பான மாற்றமாகவே நாட்டு மக்கள் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். கோட்டா ஆட்சிக்கு வந்ததும் பௌத்த சிங்கள இனவாதத்தை நாடு பூராவும் ஓவியங்கள் வழியாக வரைந்து தள்ளினார்கள். ஆனால், இரண்டு வருடங்களுக்குள்ளேயே மக்கள் இந்த மதவாத –இனவாத – அடிப்படைவாத வைராக்கியங்களைக் கடந்து நின்று, ராஜபக்ஷக்களை விரட்டுவதற்காக வீதிக்கு இறங்கினார்கள். மக்களின் அத்தியாவசிய பிரச்சினைகளை கடந்து நின்று எதுவும் இங்கு உயர்வானது இல்லை. அதாவது, மக்களின் வயிற்றுப் பசிக்கு முன்னால், இங்கு எவையும் புனிதங்கள் இல்லை என்பதுதான் மனித கூர்ப்பின் அடிப்படை. அதனை உணர்ந்து, அந்தக் கட்டங்களைக் கையாள்வது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டில் பெரு முதலாளிகள் அரிசியை பதுக்கி வைத்துக் கொண்டு அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளுகிறார்கள் என்பது அரசாங்கத்தின் வாதம். அது உண்மையானது. சில அரிசி பெரு முதலாளிகள் முதலைகள் போல மக்களின் வயிற்றுப் பசியை உண்டு திளைக்கிறார்கள். நிர்ணயிக்கப்பட்ட விலைக்கும் விற்பனை விலைக்கும் இடையில் பாரிய இடைவெளியை பேணுகிறார்கள். இதன்மூலம் கறுப்புப்பண – கறுப்புச் சந்தையை பெருமுதலாளிகள் வளர்க்கிறார்கள். இதனால், சாதாரண மக்கள் திண்டாடுகிறார்கள். உயர் மத்தியதர, மேல்தட்டு வர்க்க மக்களினால் கறுப்புச் சந்தைகளில் அரிசியை வாங்கிக் கொள்ள முடியும். அவர்களுக்கும் கறுப்புச் சந்தைகளின் முகவர்களுக்கும் இடையில் நல்ல நெருக்கமும் இருக்கின்றது. இவ்வாறான நிலை அரசாங்கத்துக்கு நெருக்கடியானதுதான். ஆனால், அதனைக் கையாள்வது தொடர்பில் அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். ரணில் ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அரிசி முதலாளிகள் ஆட்டம் போட்டது போலவே, இப்போதும் அவர்கள் நின்று ஆடுகிறார்கள்.



அதன் தொடர்ச்சி இப்போது தேங்காய், உப்புத் தொடக்கம் அனைத்துஅத்தியாவசியப்பொருள்களின் தட்டுப்பாடு வரையில் வந்து நிற்கின்றது.

தேங்காய் தட்டுப்பாட்டிற்கு கடந்த ஆண்டுகளில் தென்னைகளின் படர்ந்த ஒருவகை நோய் காரணம் என்று விவசாயிகள் கூறுகிறார்கள். ஆனால், அதனைக் காரணங்காட்டி தேங்காய் இடைத்தரகர்கள் கறுப்புச் சந்தையொன்றை திறந்திருக்கிறார்கள். அதனால்தான், 200 ரூபாய் தாண்டி தேங்காய் விலை வீங்கியிருக்கின்றது. இதனை, அரசாங்கம் ஒழுங்குபடுத்தியிருக்க வேண்டும். அதனையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் கையாள முடியவில்லை. இந்த சின்னச் சின்ன நெருக்கடிகளைக் கையாளாமல், நாட்டின் பொருளாதார – அரசியல் பிரச்சினைகளை புதிய புரட்சி மாற்றத்தோடு எப்படிக் கையாள முடியும் என்ற கேள்வி எழுகின்றது.

சபாநாயகர் நியமன விடயத்திலேயே தேசிய மக்கள் சக்தி மூக்குடைபட்டு விட்டது. பொய்யான கலாநிதிப் பட்டத்தை வைத்து, மக்களை ஏமாற்றியிருக்கிறார்கள் என்பது பெரும் பேசு பொருள். இதனால், தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகைமைகள் தொடர்பில் சந்தேகம் எழுந்திருக்கின்றது. பலரின் கல்வித் தகைமை தொடர்பிலான விவ

தொடர்ச்சி▼

# தடுமாறும் அநுர அரசு எரிச்சலில் மக்கள்!

தொடர்ச்சி▲

ரங்கள், நாடாளுமன்ற இணையத் தளத்தில் இருந்து தற்போது காணாமற்போயிருக்கின்றன. தங்களை கற்றவர்கள், புலமையாளர்கள், துறைசார் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள் என்று அறிவித்துக் கொண்ட தேசிய மக்கள் சக்தியினர், இன்றைக்கு அதிலிருந்து பெருமளவு தடுமாறுகிறார்கள். கோட்டா காலத்து "வியத்மக" குழுவினர் இப்போது அநுர அரசாங்கத்தின் ஆலோசகர்களாக, அமைச்சுக் செயலாளர்களாக ஆட்சியை ஆக்கிரமிக்கிறார்கள். ஜனாதிபதித் தேர்தலில் அநுர வெற்றி பெற்றதன் பின்னர், அப்போது பிரதமராக நியமிக்கப்பட்ட ஹரினி அமரசூரிய,



வெளிநாட்டு ஊடகவியளாரின் 'ஆட்சியை நடத்துவதற்கான அனுபவம் இருக்கிறதா?' என்ற கேள்விக்கு, "எங்களுக்கு நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய அனுபவம் இல்லை. நாட்டின் பொருளாதாரத்தை மீட்போம்…" என்ற தொனியிலான பதிலொன்றை வழங்கியிருந்தார். அந்தப் பதில், வெகுவாக மெ-ச்சப்பட்டது. தேசிய மக்கள் சக்தி ஆதரவு தளத்தினால் பெருமளவில் பகிரப்பட்டது. அது, பொதுத் தேர்தல் வெற்றிகளுக்கு வலுவும் சேர்ந்தது. ஆனால், ஹறிணியின் பதிலில் தொனித்த நம்பிக்கையை நிரூபிப்பதற்கான நடவடிக்கைகளில் புதிய அரசாங்கம் எவ்வளவு தூரம் ஆக்கபூர்வமான செயற்படுகின்றது என்ற கேள்வி முக்கியமானது.

தேசிய மக்கள் சக்தியை நம்பி வாக்களித்த மக்கள் ஒரு சில மாதங்களுக்குள்ளேயே பெரும் அதிருப்தியை வெளியிடத் தொடங்கியிருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் ஆட்சியாளர்களினால், புதிய சட்டங்களையும் திருத்தங்களையும் இலகுவாக நிறைவேற்றிக் கொள்ள முடியும். ஆனால், அதனை நடைமுறைப்படுத்துவது சார்ந்து சந்திக்கும் சிக்கல்களைக் கடந்து ஓடுவதுதான் ஆக்கபூர்வமான அரசாங்கமொன்று கொண்டிருக்க வேண்டிய தகைமை. ஆனால், அந்தத் தகைமை தொடர்பில் அநுரவும், அவரின் அமைச்சர்களும் திண்டாடுகிறார்கள். இதில், முக்கியமான விடயம் என்னவென்றால், கடந்த கால ஆட்சியாளர்கள் மற்றும் பாரம்பரிய அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பை, ஆலோசனைகளை திரைமறைவில் பெற்றுக் கொள்ளும் முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த காலத்தில் யார் யாரையெல்லாம் நாட்டின் வீழ்ச்சிக்கு காரணகர்த்தார்கள் என்று விமர்சித்தார்களோ, அவர்களிடமே திரைமறைவு ஆலோசனைகளுக்கு செல்லும் நிலை என்பது முதல் தோல்வியாக கொள்ள வேண்டும். ஆனால், பாரம்பரிய அரசியல்வாதிகள் தேசிய மக்கள் சக்தியையும் அதன் ஆட்சியையும் சில காலம் அனுமதித்து, அதன் போதமைகளை மக்கள் உணர வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதனால், அரசாங்கத்தை அவ்வளவு தூரம் விமர்சிக்காமல், குறிப்பாக கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். தாங்கள் அமைதி பேணிக் கொண்டு, புதிய அரசாங்கத்தின் மீதான மக்களின் விமர்சனங்கள் கோபமாக மாறும் வரை காத்திருத்தல் என்பது தங்களின் எதிர்கால அரசியலுக்கு பலம் சேர்க்கும் என்பது பாரம்பரிய அரசியல்வாதிகளின் நிலைப்பாடு. அது, காத்திருத்து வேட்டையாடும் உத்தி. அதனால்தான். அநுரவோடு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நெருக்கம் காட்டிய பாரம்பரிய அரசியல்வாதிகள் கூட, பொதுத் தேர்தலின் பின்னர், அந்த நெருக்கத்தை தவிர்த்துவிட்டார்கள். இது, தென் இலங்கை, வடக்கு – கிழக்கு என்ற வேறுபாடுகள் இன்றி, பாரம்பரிய அரசியல்வாதிகள் பேணும் உத்தியாக தெரிகின்றது.

பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அலைக்குள் மக்கள் சிக்குண்ட நிலையானது, எதிர்பார்த்த அளவினைக் காட்டிலும் அதிகமானது. அதனைக் கடத்தல் என்பது, அதன் மீதான மக்களின் விமர்சனங்களில் இருந்து எழ வேண்டியது என்பது, பாரம்பரிய அரசியல்வாதிகளின் நிலைப்பாடு. அதனைப் புரிந்து கொள்ளாது, எதிர்க்கட்சியில் இருந்த காலத்தில் செய்த அரசியலுக்கு ஒப்பான மேடைப் பேச்சு அரசியலை மாத்திரம் அநுரவும் அவரது தோழர்களும் இனியும் செய்தால், அவர்கள் வீழ்த்தப்படுவது இலகுவாகிவிடும். புதிய ஆட்சியாளர்கள் புதிய புரட்சி மாற்றத்தைப் பேசவும் வேண்டும். மக்களின் நடைமுறைச் சிக்கல்களுக்கான தீர்வை உடனடியாக வழங்கவும் வேண்டும். இல்லையென்றால், வெகு சீக்கிரத்திலேயே மக்களின் நம்பிக்கையை இழந்து, வீதிக்கு வருவார்கள்.

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலை புறக்கணிப்பதாக அ.தி.மு.க அறிவிப்பு

பெப்ரவரி 5 ஆம் திகதி நடைபெற உள்ள ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலை அ.தி.மு.க. புறக்கணிக்கிறது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். அதற்கான காரணங்களையும் அவர் பட்டியலிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"மறைந்த கருணாநிதியின் காலந்தொட்டு, தி.மு.க. ஆட்சிக்கு வரும்போதெல்லாம் 'அராஜகம், வன்முறை என்றாலே தி.மு.க – தி.மு.க. என்றாலே அராஜகம், வன்முறை' என்று மக்கள் முகம் சுளிக்கும் அளவுக்கு நடந்து கொண்டு வருவதை மக்கள் அனைவரும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சிக் காலங்களில், தி.மு.கவினரால் நிகழ்த்தப்பட்ட அராஜக, வன்முறைச் சம்பவங்கள் எண்ணிலடங்காதவை.



கடந்த முறை நடைபெற்ற ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தலில், அள்ளி இறைக்கப்பட்ட பணம், மது, கொலுசு, குக்கர், தங்கக் காசு உள்ளிட்ட பரிசுப் பொருள்கள் என இவை எல்லாவற்றையும் தாண்டி தி.மு.கவின் மிரட்டல், அப்பாவி மக்களைப் பெருமளவில் அச்சுறுத்தியது. வாக்காளர்களை பட்டியில் அடைத்த அவலமும் நடந்தேறியது.

தி.மு.கவினர் அழைக்கும் இடத்துக்கு வந்து காலை முதல் இரவு வரை உட்கார்ந்து இருக்கவில்லையென்றால், முதியோர் உதவித் தொகையோ, வேறு எந்த அரசு நலத் திட்டங்களோ வழங்கப்படமாட்டாது என்கிற மிரட்டலுக்கு பயந்து, மக்கள் சொந்த மண்ணில் அகதிகளைப் போல நடத்தப்பட்ட விதத்தை நினைத்தாலே நெஞ்சம் பதறுகிறது. இவ்வாறு, ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்து, மக்களாட்சியின் மகத்துவத்தை மறந்து, வன்முறையில் ஈடுபடுவது மட்டுமே தி.மு.கவினரின் வாடிக்கை.

நடைபெற உள்ள ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தலிலும், நிர்வாகத் திறனற்ற தி.மு.கவின் ஸ்டாலின் மாடல் அரசின் அமைச்சர்களும், தி.மு.கவினரும் ஆட்சி அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவார்கள் என்பதாலும் பணபலம், படைபலத்துடன் பல்வேறு அராஜகங்கள் மற்றும் வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டு, மக்களை சுதந்திரமாக வாக்களிக்க விடமாட்டார்கள் என்பதாலும் தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறாது என்பதாலும், பெப்ரவரி 5 ஆம் திகதி அன்று நடைபெற உள்ள ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தலை, அ.தி.மு.க. புறக்கணிக்கிறது." என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வு இல்லை

## விஜய் அறிவிப்பு



தான் ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வு இல்லை என்று விஜய் அறிவித்துள்ளார்.

நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 2026 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள தீவிரமாக தயாராகி வருகின்றது.

இந்நிலையில் அக்கட்சித் தலைவர் விஜய் அவரது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"தேர்தலுக்கு முன்பு போலியான வாக்குறுதிகளை மக்களைக் கொடுத்து தேர்தலின் பின் மீண்டும் மக்களை ஏமாற்ற வேண்டும் என்பது தான் தற்போது தமிழக ஆட்சியாளர்களின் எண்ணம்.

அதற்கு நீட் தேர்வு விவகாரம் ஒரு சான்று. 2021 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வை கண்டிப்பாக ரத்து செய்வோம் என்று ஆட்சியாளர்கள் மக்களை நம்ப வைத்தனர்.

ஆனால், தற்போது நீட் தேர்வை ரத்து செய்யும் அதிகாரம் அரசுக்குத்தான் உள்ளது. மாநில அரசால் அதனை ரத்து செய்ய முடியாது என்று தெரிவித்திருப்பது மக்களை ஏமாற்றும் செயல் அல்லவா?

பல பொய்களைச் சொல்லி தமிழக மக்களை ஏமாற்றலாம் என்ற எண்ணம் இனி வரும் காலங்களில் ஈடேறப் போவதில்லை." என்று குறிப்பிட்டுள்ளார்.

# சீனாவின் எச்.எம்.பி.வி. வைரஸ் தமிழ்நாட்டில் கண்டறியப்பட்டது




சீனாவில் இருந்து குழந்தைகளை தாக்கக்கூடிய மெட்டாப் நியூமோவைரஸ் (எச்.எம்.பி.வி.) தொற்று உலகம் முழுவதும் பரவி வருகிறது. இந்தியாவில் பாதிப்பு 13 ஆக உயர்ந்துள்ள நிலையில், தமிழ்நாட்டில் இரண்டு சிறுவர்களுக்கு எச்.எம்.பி.வி. வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.

புதிதாக பரவி வரும் எச்.எம்.பி.வி. வைரஸ் தொற்றும் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்துமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இருப்பினும், தொற்று குறித்து பயப்படத் தேவை இல்லை எனவும், ஆனால் பாதுகாப்பு வழிமுறைகள் அவசியம் எனவும் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.



# லொஸ் ஏஞ்சலிஸில் பரவும் காட்டுத்தீயை கட்டுப்படுத்தப் போராடும் சிறைக்கைதிகள்!

லொஸ் ஏஞ்சலிஸில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறைக்கைதிகள் இணைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் பெண்களும் அடங்குகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் பரவிவரும் காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடும் சிறைக்கைதிகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை லொஸ் ஏஞ்சலிஸில் 37 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்புகள் தீக்கிரையாகியுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரையில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளும், கட்டடங்களும் தீக்கிரையாகியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் அச்சம் நிலவுவதாக குறிப்பிட்டுள்ளார்.



# விபத்துக்குள்ளான தென்கொரிய விமானத்தின் கறுப்புப் பெட்டி விசாரணை அறிக்கை வெளியீடு

தென் கொரியாவில் அண்மையில், இடம்பெற்ற விமான விபத்தின் போது விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்பு பெட்டி, விபத்திற்கு நான்கு நிமிடங்களுக்கு முன்னதாகவே பதிவு செய்யும் செயற்பாட்டை இடைநிறுத்தியுள்ளதாக தென்கொரிய போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் ஏற்பட்ட இந்த விமான விபத்தில் 179 பேர் பலியாகினர்.

இந்தநிலையில், மேற்படி விபத்துக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக அந்த நாட்டு அதிகாரிகளால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

விமானத்தின் கறுப்பு பெட்டியை ஆய்வு செய்த அதிகாரிகள், விமானத்தின் கறுப்பு பெட்டிகள் பதிவை நிறுத்துவதற்கான காரணங்கள் தொடர்பில் ஆரம்பக் கட்ட பகுப்பாய்வை மேற்கொண்டனர்.

மேற்படி கறுப்புப் பெட்டியில் முக்கியமான சில தரவுகள் காணாமல் போனமை தொடர்பில் ஆரம்பிக்கப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

பின்னர் அந்த கறுப்பு பெட்டி அமெரிக்க தேசிய போக்குவரத்து பாதுகாப்பு சபையின் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது.

இந்தநிலையில், ஜேஜு விமான நிறுவனத்திற்கு சொந்தமான குறித்த விமானம் விபத்துக்குள்ளாவதற்கு 4 நிமிடங்களுக்கு முன்னதாக அதன் பதிவு செய்யும் செயற்பாட்டை இடைநிறுத்தியுள்ளதாக தென்கொரியாவின் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 12.01.2025

## மேஷம்

இன்று உங்கள் செயல்களில் வெற்றி காண்பீர்கள். உங்களின் உறுதி மற்றும் தைரியம் வெற்றி பெற உங்களுக்கு வழி காட்டும்.

உங்கள் பணிகளை சீராக ஆற்று வீர்கள். பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே முடிப்பீர்கள்.

உங்கள் தாயுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் பணிக்கு நீங்கள் ஊக்கத் தொகை பெறுவீர்கள். இது உங்களுக்கு கூடுதல் பண வரவாக இருக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப் பீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## ரிஷபம்

நீங்கள் யதார்த்தமாகவும் தொழில் சார்ந்த அணுகுமுறையுடனும் நடந்து கொள்ள வேண்டும். இன்று பயணங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இசை நிகழ்ச்சி களில் பங்கு கொள்வதன் மூலம் ஆறு தல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை சிறிது கவனமுடன் மேற்கொள்ள வேண்டும். பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும். அதன் மூலம் உங்கள் பணிகளை எளிதாக ஆற்ற இயலும்.

இன்று காதலுக்கு உகந்த நல்ல அல்ல. உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

பணப்புழக்கம் மகிழ்சிகரமாக இருக்காது. பண இழப்பு ஏற்படாமல் இருக்க நீங்கள் கவனமாகக் கையாள வேண்டும்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## மிதுனம்

இது உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. உங்கள் பணிகளை முன் கூட்டியே திட்டமிடுங்கள். இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். கூடுதல் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாத நிலை இருக்கும்.

உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். உங்கள் உணர்வுகளைக் கட்டுபடுத்த வேண்டும். அன்பை வளர்க்க வேண்டும்.

வீட்டின் புனரமைப்பு மற்றும் பராமரிப்புக்குப் பணம் செலவு செய்ய நேரும். பணத்தை கவனமாகக் கை– யாளவும்.

## கடகம்

இன்று உங்களுக்கு சுமூகமான நாளாக இருக்கும். இன்று புத்துணர்ச்சி யுடன் இருப்பதாக உணர்வீர்கள். சுப காரியங்களில் பங்கு கொள்வீர்கள்.

பணியில் வெற்றிகரமான பலன்கள் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுற வைப் பராமரிப்பீர்கள்.

இன்று உங்கள் திருமணத்தைத் திட்டமிடலாம். அதற் கான ஆயத்தங்கள் செய்து நீங்கள் மகிழலாம்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும்.உங்களால் சிறிது பணம் சேமிக்க இயலும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.

## சிம்மம்

இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் முயற்சிகள் வெற்றி பெறும். எதிர்பாராத நன்மைகள் கிடைப் பதற்கான சாத்தியம் உள்ளது. இது உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தி யையும் அளிக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று தேவையற்ற செலவுகளை சந்திக்க வேண்டிய சூழல் காணப்படும். அதிகரிக்கும் செலவுகள் ஏற்படும் காரணத்தால் உங்களால் அவற்றை சமாளிக்க இயலாது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொடை வலி போன்ற சிறு பிரச்சினைகள் இன்று உங்களிடம் காணப்படும்.

## கன்னி

இன்று அவ்வளவு சிறப்பான நாள் அல்ல. ஏற்ற இறக்கங்கள் காணப்படும். உங்கள் மனதை தெளிவாக வைத் திருக்க வேண்டியது அவசியம்.

இன்று பணிகள் அதிகமாகவும் அதில் நீங்கள் மும்மரமாகவும் இருக்க வாய்ப்புள்ளது. அனுசரித்து போவதன் மூலம் உங்கள் பணிகளை வெற்றிகரமாக முடிக்கலாம்.

உங்கள் துணையுடன் உணர்சிவசப்படுவீர்கள். இந்தப் போக்கை தவிர்ப்பது நல்லது.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். பணத்தை கவனமாகக் கையாளவும்.

அதிக பணிகள் காரணமாக சோர்வுடன் காணப்படு வீர்கள். தலைவலி காணப்படும். இதனால் அசௌகரிய மாக உணர்வீர்கள். இருந்த போதிலும் மன ஆற்றல் காரணமாக நீங்கள் இதனை சமாளிப்பீர்கள்.

## துலாம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி திட்டமிட்டு பணியாற்றுவது சிறந்தது. சில சமயங்களில் நீங்கள் பொறுமை இழக்கும் வாய்ப்பு உள்ளது. அமைதியாக செயல்பட வேண்டும்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் பணி களை முடிக்க முன் கூட்டியே திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன்சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். உங்கள் சொந்த பந்தங்களுடன் அன்பை வளர்த்துக் கொள்வது நல்லது.

இன்று பண வரவுக்குச் சாதகமான நாள் அல்ல. நீங்கள் தேவையின்றி பணத்தை செலவு செய்ய நேரலாம்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். கால் வலி மற்றும் தலைவலி போன்ற பாதிப்புகள் காணப்படும்.

## விருச்சிகம்

இன்று விரைவில் முன்னேற்றம் கிடைக்கும் குறைந்த முயற்சியில் இன்று உங்களுக்கு வெற்றி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் இருப்பீர்கள்.

புதிய வேலைக்கான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் திறமையை உணர்ந்து கொள்ள இந்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று உங்கள் உடன் பிறந்தோரிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள். உங்கள் குடும்பத்துடன் தரமான நேரத்தை செலவிடுவீர்கள்.

பணம் அதிக அளவில் காணப்படும். இன்று உங் களால் பணத்தை அதிக அளவில் சேமிக்க இயலும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களிடம் திருப்தியும் தைரியமும் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.01.2025




இன்று பல செயல்கள் காணப்படும். நீங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி உங்கள் காரியங்களை மேற்கொள்ள வேண்டும். எந்த செயலையும் செய்வதற்கு முன் ஒன்றிற்கு இரண்டு தடவை யோசித்து செயல்படவேண்டும். உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை.

பணியில் மாற்றங்கள் காணப்படும். பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். பணியிடத்தில் பிறருடன் பேசுவதற்கு முன் உங்கள் எண்ணங்களில் கவனம் செலுத்துங்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று செலவுகள் சுமையாக காணப்படும். உங்கள் பணத்தை சாதுர்யமாக நிர்வகிப்பது கடினமாக இருக்கும்.

கண் எரிச்சல் போன்ற பாதிப்பு காணப்படும்.




இன்று மந்தமான நாளாக இருக்கும். உங்கள் பணிகளை எளிதாக கையாள்வது கடினமாக இருக்கும். வெற்றி காண நீங்கள் திட்டமிட்டு செயல்பட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். இதனால் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனால் முறையுடன் பணியாற்ற இயலாது.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் நெருக்கத்தை இன்று தவிர்க்க வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி அவ்வளவு சிறப்பாக இருக்காது. பண இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது. தக்க நேரத்தில் உணவை உட்கொள்ள வேண்டும்.




இன்று சராசரி பலன்கள் கிடைக்கும் நாள். நீங்கள் விரைந்து முடிவெடுப்பதை தவிர்க்க வேண்டும். இல்லையெனில் பிறகு வருத்தப்பட நேரும். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

உங்கள் சக பணியாளர்களுடன் உறவுமுறையில் சில பிரச்சினை காணப்படும். இது பாதிக்காத வகையில் நீங்கள் அனுசரித்து செயல்படுவது சிறந்தது.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. சில அமைதியற்ற தருணங்கள் காணப்படும்.

நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

கால் மற்றும் தொடை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும் உங்கள் மனது தெளிவாக இருக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறி திருப்தி கிடைக்கும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணியில் சுமூகமான விளைவுகள் காணப்படும். உங்கள் திறமைக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

இன்று காதலுக்கு உகந்த நாள். நீங்கள் உங்கள் காதல் உணர்வுகளை இன்று வெளிப்படுத்த இயலும்.

நிதிநிலைமை வளர்ச்சி தரும் வகையில் இருக்கும். உங்கள் பணத்தை நீங்கள் புத்திசாலித் தனமாக கையாள்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் இன்று சிறந்த தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.



# வாகனங்களின் விலை 50 சதவீதம் அதிகரிக்கும்

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலை எதிர்காலத்தில் 50 சதவீதம் வரை அதிகரிக்கக்கூடும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரெஞ்சிகே தெரிவித்துள்ளார்.

ஐந்து ஆண்டுகளாக இடைநிறுத்தப்பட்டிருந்த வாகன இறக்குமதியை மீண்டும் ஆரம்பித்ததன் பின்னர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் இறக்குமதி செய்யப்படும் அனைத்து வாகனங்களுக்கான வரி வீதம் விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று முதல் அமுலுக்கு வந்தது.

அதன்படி, உற்பத்தி செய்யப்பட்ட நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்கு மேற்படாத வாகனங்களுக்கு 200 சதவீதம் மற்றும் 300 சதவீதம் வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

சில வகையான வாகனங்களுக்கு அவற்றின் இயந்திர திறன் அடிப்படையாகக் கொண்டு வரிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இந்த வரி வீதங்களின்படி, இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலைகளும் வெற் வரி நீங்கலாக, 15 முதல் 20 சதவீதம் வரை அதிகரிக்கக்கூடும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.